# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2015

## கணிதம்

| தரம் :- 06 | சுட்டெண்:- ........................................ | நேரம்:- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடையை இத்தாளிலே எழுதுக.

01) வட்டம் ஒன்றிற்கு வரையக்கூடிய சமச்சீர் கோடுகள் எத்தனை?

..........................................................................................................................................

02) 4302 ஐ எண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.

03) 7 இற்கான கூட்டல் பிணைப்புக்கள் எத்தனை?

..........................................................................................................................................

04) $20000 \div \square = 200$ வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண் யாது?

05) 72 செக்கனை நிமிடம், செக்கனில் தருக.

..........................................................................................................................................

06) மாணவர்களுக்கான கண் பரிசோதனை 2014 ம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாந் திகதி நடைபெற்றது. அத்தினத்தை நியமமுறையில் தருக.

..........................................................................................................................................

07) $-3,\ 1,\ 0, -5$ ஐ ஏறுவரிசைப்படுத்துக.

..........................................................................................................................................

08) $73 + 68 + 28$ ஐ கிட்டிய பத்திற்கு மட்டந்தட்டுவதன் மூலம் பெறுமானத்தை மதிப்பிடுக.

..........................................................................................................................................

09) வடக்கு நோக்கி நிற்கும் ஒருவன் தனது இரு கைகளையும் நீட்டும் போது இடதுகை எத்திசையைச் சுட்டுகிறது?

..........................................................................................................................................

10) A என்ற எழுத்தில் எத்தனை விரிகோணங்கள் உள்ளன?

..........................................................................................................................................

11) $3 \square - 3$ ஐ ஒப்பிடுக.

..........................................................................................................................................



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

12) ஒரு பில்லியனில் எத்தனை பூச்சியங்கள் உள்ளன?

..........................................................................................................

13) 2 நாள் 9 மணி ஐ மணித்தியாலத்தில் தருக.

..........................................................................................................

14) 1 மில்லியனுக்கு 1 குறைவான எண் யாது?

..........................................................................................................

15) வட்டத்தின் சமச்சீரச்சுக்கள் வெட்டும் புள்ளி எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................................................

16) பின்வளை கோணமொன்றை வரைந்து காட்டுக.

17) $\square \times 6 = 90$ வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண் யாது?

..........................................................................................................

18) 5, 3, 4, 1 ஆகிய இலக்கங்களை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி எழுதக் கூடிய மிகப்பெரிய இரட்டை எண் யாது?

..........................................................................................................

19) நிறுவனமொன்றில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை கிட்டிய பத்திற்கு மட்டந்தட்டப்பட்டு 30 எனக் கூறப்பட்டது. அந் நிறுவனத்தில் இருக்கக் கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையின் அதிகூடிய பெறுமானம் யாது?

..........................................................................................................

20) நேர் கோணமொன்றிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................

($20 \times 2 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) (a) குறிப்பிட்ட நாளொன்றில் இலங்கையிலுள்ள சில பிரதேசங்களின் வெப்பநிலைகள் பற்றிய விபரம் கீழே எண்கோட்டில் காட்டப்பட்டுள்ளது.




Education கல்வி



kalvi.lk

i) எந்தப் பிரதேசம் மிகவும் கூடிய வெப்பநிலையைக் கொண்டுள்ளது? வெப்பநிலை யாது?

.....................................................................................................................

ii) 30°C வெப்பநிலையைக் கொண்ட பிரதேசம் எது?

.....................................................................................................................

iii) மிகவும் குளிரான பிரதேசமாக காணப்படுவது எப்பிரதேசம்?

.....................................................................................................................

iv) கண்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான வெப்பநிலை வேறுபாடு எவ்வளவு?

.....................................................................................................................

v) கூடிய வெப்பநிலையிலிருந்து குறைந்த வெப்பநிலைக்கேற்ப பிரதேசங்களை ஒழுங்குபடுத்துக.

.....................................................................................................................

(b)

i) எண்கோடொன்று வரைந்து -3, 2 ஆகிய புள்ளிகளைக் குறிக்க.

ii) அவற்றிற்குரிய எதிர்ப்புள்ளிகளையும் குறித்துக் காட்டுக.

iii) அப்புள்ளிகளை இறங்குவரிசையில் தருக.

.....................................................................................................................

(16 புள்ளிகள்)

02) (a) சுருக்குக.

i) 4355 + 8676 = .....................................................

ii) 7596 – 4689 = .....................................................

iii) 421 × 32 = .....................................................

iv) 5064 ÷ 12 = .....................................................

(b) விமலன் புத்தகசாலையொன்றிற்குச் சென்று ரூ 1250 பெறுமதியான புத்தகப்பையும் ரூ 1200 பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளையும் வாங்கிய பின் கடைக்காரரிடம் ரூ 3000 ஐக் கொடுத்தான் எனின் கடைக்காரன் விமலனுக்குக் கொடுத்த மீதிப்பணம் யாது?

.....................................................................................................................

(11 புள்ளிகள்)


kalvi.lk

03) (a) வியாபார நிலையமொன்றில் காணப்பட்ட விலைப்பட்டியல் விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| 1 kg | சீனி | ரூ 89.50 |
| 1 kg | அரிசி | ரூ 76.00 |
| 1 kg | மா | ரூ 73.00 |
| 1 kg | கிழங்கு | ரூ 48.00 |

மேற்படி வியாபார நிலையத்திற்குச் சென்ற பெண் ஒருவர் பின்வரும் பொருட்களை வாங்குகின்றார்.

1 kg சீனி


5 kg அரிசி

5 kg மா

2 kg கிழங்கு

ஒவ்வொரு பொருட்களுக்குமான விலையை மதிப்பிடுவதன் மூலம் மொத்தச் செலவை மதிப்பிடுக.

..............................................................................................................

(b) 


கோணவகைகளைப் பெயரிடுக.

$x$ - ..............................................................

$y$ - ..............................................................

$z$ - ..............................................................

(11 புள்ளிகள்)

04) (a)

i) $10000 \times 2 + 1000 \times 1 + 100 \times 0 + 10 \times 9 + 1 \times 8$ ஐ குறிக்கும் எண் யாது?

..............................................................................................................

ii) 4325 ஐ விரித்தெழுதுக.

..............................................................................................................

(b)

i) "இருபத்தைந்து மில்லியன் எண்பத்தையாயிரத்து நூற்று நாற்பத்தொன்பது" இதனை இலக்கத்தில் எழுதுக.

..............................................................................................................

ii) இலக்கம் 2 எந்த வலயத்திலுள்ளது?

..............................................................................................................

iii) 8 இன் பெறுமதி யாது?

..............................................................................................................

iv) இலக்கம் 5 இன் பெறுமதிகள் சமமானவையா? காரணம் தருக.

..............................................................................................................

(11 புள்ளிகள்)




kalvi.lk

05) (a) பின்வரும் நேரங்களை சர்வதேச நியமமுறையில் தருக.

i) மு. ப. 7.45 ..........................................................................

ii) நண்பகல் 12.00 ..........................................................................

iii) பி. ப. 8 மணி 30 நிமிடம் 25 செக்கன் ..........................................................................

(b) பின்வரும் நேரங்களை சாதாரண கடிகார நேரமுறையில் தருக.

i) 09:30h ..........................................................................

ii) 18:25h ..........................................................................

(c) ஒருவர் தனது வீட்டிலிருந்து வேறோர் நாட்டிற்கு செல்வதற்கு 1 நாள் 4 மணித்தியாலம் எடுக்கின்றது. அவர் புதன்கிழமை காலை 9 மணிக்கு புறப்படுகின்றார் எனின் குறித்த நாட்டை எப்போது சென்றடைவார்?

..........................................................................

(11 புள்ளிகள்)

06)

| | | |
|---|---|---|
| நூலகம் | பாடசாலை | கோயில் |
| சந்தை | வீடு | வைத்தியசாலை |
| புகையிரத நிலையம் | தபாற் கந்தோர் | வங்கி |

மேற்படி தகவலைக் கொண்டு வெற்றிடத்தை பூர்த்தி செய்க.

i) வீட்டிற்கு வடக்குத் திசையில் .......................................... உள்ளது.

ii) தபாற்கந்தோரிற்கு .......................................... திசையில் வங்கியுள்ளது.

iii) .......................................... வீட்டிற்கு தென்மேற்கே உள்ளது.

iv) நூலகம் வங்கிக்கு .......................................... உள்ளது.

v) நூலகத்திற்கு தெற்கே .........................., .......................... என்பன உள்ளன.

(11 புள்ளிகள்)

Education கல்வி அடியாபன



kalvi.lk

kalvi.lk

# GRADE 6,7,8

STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page